# ஜாமக்காரன்

# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 7** **Reg No.TNBIL/2016/70171** **ISSUE - 5**

**MAY 2023 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


ஜாமக்காரன் JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பான வாசகர்ளுக்கு,

நீங்கள் எனக்காக செய்த ஜெபத்தாலும் என் மரண தருவாயில் நான் கர்த்தருக்கு முன் எடுத்த தீர்மானத்தாலும் கொரானா வியாதியிலிருந்து சுகம் பெற்று கடந்த **இரண்டரை வருடத்துக்கு** பிறகு கர்த்தருக்குள் **புது பெலன் பெற்று** சபை மக்களை வசனத்துக்கு நேராக திருப்பும் **பிரசங்க ஊழியத்தை** செய்ய தொடங்கிவிட்டேன் இதுவரை 42 கன்வென்ஷன்களில் பிரசங்கித்துவிட்டேன். ஒவ்வொரு நாளும் நான்மேடை ஏறி மைக்முன் நின்று பிரசங்கம் செய்ய தொடங்கும்போதே **தேவ ஆவியானவர்** என்னை நிறைத்து புதுவல்லமையை எனக்கு அளித்து **அவர் தன் கருவியாக** என்னை உபயோகிக்கும் போது கூடியிருக்கும் விதவிதமான ஆவிக்குரிய அனுபவமுள்ள மக்களின் தேவைக்கேற்ப கர்த்தரின் செய்திகள் வசனங்களோடு சேர்த்து என் பிரசங்கம் வழியாக மிக சரளமாக வெளிவரும்போது ஏராளமான மக்கள் தொடப்படுகிறன்றனர். சுகமும் பெருகிறார்கள். கூடியிருக்கும் ஆயர்களும் தொடப்படுகின்றனர்.

முன்பெல்லாம் ஒருவர் மீது கைவைத்து ஜெபிக்கும்போது **ஏற்படும் அற்புத** சுகம், ஆறுதல், ஆவியானவரால் நிறப்பப்படுவது போன்ற சம்பவங்கள் இப்போது

**MAY - 2023**

நான் பிரசங்கிக்கும்போதே அதே அற்புதங்கள் பலருக்குள் செயல்படுவது அதை நான் பிரசங்கிக்கும்போதே கர்த்தர் எனக்கு கொடுத்த ஆவியில் நான் உணருகிறேன். பிரசங்கித்த வசனம் என்னிடம் திரும்பி வருகிறதில்லை. நான் கூறும் **வசனம்** அப்படியே ஒவ்வொருவருக்குள்ளும் கிரியை செய்கிறது. இது எத்தனை **கிருபை,** கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

**என் 83 வயதிலும்** கர்த்தர் எனக்கு கொடுத்த இரட்டிப்பான **பலம்,** ஆரோக்கியம், **ஞாபக சக்தி,** யாவுக்காகவும் தேவனை துதிக்கிறேன்.

பழையதுபோல **நீண்ட தூர பயனங்கள்** – கூட்டங்கள் முடிந்து அதிகாலை 3 மணிக்கு வீடு திரும்புவது, மறுநாள் அலுவலகம் சென்று கடிதங்கள், E-mail யாவையும் பார்ப்பது, மேலும் ஜாமக்காரன் **பத்திரிக்கைக்கான செய்திகளை** தயாரிப்பது போன்ற யாவையும் வழுமையாக இப்போதும் செய்கிறேன். **களைப்பு** ஏற்படுவதில்லை, ஒரு சிறு மாற்றம், முன்பெல்லாம் **மதியம்** உறங்க மாட்டேன். ஆனால் இப்போது மதியம் கொஞ்ச நேரம் உறங்குகிறேன். மதியம் படுக்கும்போது தினசரி பத்திரிகைகள் படிப்பது அப்படியே ஒரு மணி நேரம் உறங்குவது என்பது **புது வழக்கமாக** ஏற்பட்டு உள்ளது. கன்வென்ஷன் கூட்டங்களிலும் **மதிய கூட்டங்களில்** பிரசங்கிப்பதில்லை என்று திட்டமாக கூறிவிடுகிறேன்.

என் மனைவி கூறுவார் நீங்கள் என்ன! 24 வயது வாலிபனா? பழையது போல ரயிலிலும், காரிலும் நீண்டதூரம் பயனித்துக்கொண்டிருக்கிறீர்கள். தயதுசெய்து **கூட்டத்தையும், வேகத்தையும் குறைத்துக்கொள்ளுங்கள்** என்பார்.

எல்லாவற்றிக்கும் ஒரு முடிவு உண்டு அல்லவா!. **என் காலங்கள்** கர்த்தரின் கையில் வரையப்பட்டிருக்கிறது. கன்வென்ஷன் கூட்டங்களில் **ஒன்றரை** அல்லது **இரண்டு மணி நேரம்** நின்றுகொண்டே பேச முடியாமல் **ஈ.வெ.இரா. பெரியார்** அவர்களைபோல என்றைக்கு நான் **நாற்காலியில் அமர்ந்து** பிரசங்கம் செய்யும் நிலை வருகிறதோ ! அப்போதுதான் என் **பிரயானத்தை** நிறுத்தி வெளியில் செல்வதை நிறுத்துவேன். **அப்போது தமிழ்நாடோ, கேரளமோ, வட இந்தியாவோ** போய் பிரசங்கிப்பதை நான் **நிறுத்திக்கொள்வேன். அதுவரை எப்போதும்போல் என் ஊழியம் தொடரும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

## எழுத்து ஊழியம்

கடந்த மாதம் சகோ. **R. ஸ்டான்லி** (BYM) அவர்கள் அறிவித்ததைபோல **இனி வெளி ஊழியங்களுக்கு என்னை அழைக்க வேண்டாம்** என்று அவர் எழுதி அறிவித்துவிட்டார்... அதோடு இனி நான் **எழுத்து பணியில்** ஈடுபட்டு ஏராளமான பைபிள் ஸ்டடி சம்பந்தமான **புஸ்தகங்களை** எழுதுவேன் என்றார். என் ஓய்வுக்குபின் நானும் சகோ. ஸ்டனேலி போலவே

எழுத்து பணியை தொடங்குவேன்.

1964 முதல் நான் பல முக்கியமான **தலைப்புகளில்,** நான் **பிரசங்கித்த செய்திகள்,** வேத **பாடங்களையும், வாசகர்கள்** கேட்டுகும் கேள்விக்கான **பதில்களையெல்லாம் பு**த்தக வடிவில் கொண்டு வருவேன். **என் தனிப்**பட்ட ஆவிக்குரிய அனுபவங்கள் வாலிப பிள்ளைகளுக்கு அறிவித்த **ஆலோசனைகள், திருமணம் ஆனவர்களுக்கு** ஏற்படும் பலவித **குடும்ப பிரச்சனைகளுக்கான** தீர்வுகளை **வேத வசன அடிப்படையில் எழுதி வெளியிடுவேன். திரும்பிப் பார்க்கிறேன்** என்ற தலைப்பில் **என் வாழ்க்கையின் அனுபவங்களை** பதிமூன்று **பாகங்களாக ஜாமக்காரனில்** அவ்வப்போது எழுதி வந்தேன். அவைகளையும் ஒரு புத்தகமாக வெளியிடுவேன்.

**ஜாமக்காரன்** பத்திரிகை **( தமிழ் & மலையாளம்)** மாதா மாதம் வழமையாக வெளியிடப்படும்.அதில் எந்த மாற்றமும் இராது இந்த மாதிரி ஊழியத்தை கர்த்தர் என்னை **எடுத்துக்கொள்ளும் நாள் வரை** என் தொடர் ஊழியமாக செயல்படுவேன் என்று கர்த்தருக்குள் நான் நம்புகிறேன்.

**ஜாமக்காரன் :**

**என் மரணத்துக்குபின் ஜாமக்காரன் பத்திரிகை நிறுத்தப்படும்.** எனக்கு பின் **ஜாமக்காரனைபோல்** எச்சரிக்கும் – அறிவிக்கும் பத்திரிகை ஊழியத்தை யாரும் தைரியமாக **எழுத இயலாது.** காரணம், நான் தமிழ்நாடு – கேரளா மற்ற எல்லா மாநிலங்களிலும் காஷ்மீர் வரை இந்தியாவில் அனைத்து சபைகளிலும் பிரசங்கம்செய்து அத்தனை மாநில சபை மக்களோடு தொடர்புகொண்டு பழகியவன். மேலும் 164 தேசங்களிலும் நான் பிரசங்கித்த சபைகளில் உள்ள பல்வேறு கலாச்சார மக்களோடு நேரடி தொடர்பு கொண்டவன். பல லட்ச வாசகர்கள் எனக்கு உண்டு.

இந்தியாவின் எல்லா மாநிலத்திலும் அனைத்து சபை மக்களிடம், ஆயர்களிடம், பிஷப்மார்களிடம், உலக நாடுகளில் உள்ள பல லட்சக்கணக்கான வாசகர்களோடு எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. தன் குடும்பத்தில் ஒருவனாய் அவர்கள் இந்த நாள் வரை என்னை ¼நசிக்கிறார்கள். நான் ஜாமக்காரனில் அல்லது Websiteல் எழுதும் செய்திகள் அப்படியே தீபோல் அனைத்து வாசகர்களிடையே பரவி விடுகிறது. 3 சந்ததி மக்கள் தொடர்ந்து என்னை நேசிக்கிறார்கள். இந்த பாக்கியம் தமிழ்நாட்டில் உள்ள எந்த ஊழியக்காரர்களுக்கும் கிடைக்காத ஒன்று. என் முகம் கண்டு பழக்கம் இல்லாத புதிய சந்ததி பிள்ளைகளும் என்னை நேசிக்கிறார்கள். அவர்களின் தாத்தா – பாட்டி – பெற்றோர் என்னை நேசிப்பதை அவர்கள் அறிந்ததால் அந்த பிள்ளைகளும் என்னை நேசிக்கிறார்கள்.

ஆகவே இப்படிப்ட்டப அன்பு வாசகர்கள் வேறு யாருக்கும் கிடையாது. ஆகவேதான் பிஷப், பாஸ்டர்கள், ஆயர்கள் சிலருக்கு என்னை பிடிக்காது போனாலும். அதன் காரணம் அவர்கள் நான் ஊழியத்தில் உண்மையுள்ளவன் என அறிந்துள்ளார்கள். இந்த அபூர்வ அன்பும், பாசமும் கிடைக்கப்பெற்றவர் யாரும் இல்லாததால் **ஜாமக்காரன்** ஊழியத்தை எனக்குபின் யாராலும் செய்யமுடியாது. கர்த்தர் வேறு விதத்தில் ஜாமக்காரன் எச்சரிப்பு – அறிவிப்பு ஊழியத்தை செய்ய திட்டம் வைத்திருப்பார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

- ☐ இத்தனை காலம் **ஜாமக்ாரன் ஊழியத்தை** பணத்தாலும், ஜெபத்தாலும் தாங்கி வந்த வாசகர்களுக்கு நன்றி கூறுகிறேன். இதற்கு மேலும் கர்த்தர் **இந்த உலகில்** என்னை **உயிரோடு வைத்திருக்கும் காலம் வரை** பணத்தாலும் **ஜெபத்தாலும்** தொடர்ந்து **தாங்க போகும்** அனைத்து விசுவாசிகளுக்கும் வாசகர்களுக்கும் **நன்றி** கூறிக்கொள்கிறேன்.

இதை வாசிக்கிற நீங்களும் **மனந்திரும்பி** இரட்சிக்கப்பட்டு **சாட்சியாக** வாழ்வீர்களேயானால் **நம் எல்லாருடைய மரணத்துக்கு பின்** அல்லது **கர்த்தரின் வருகைக்கு பின்** நாம் யாவரும் ஒன்றாக ஒரே இடத்தில் **நிச்சயமாக சந்திப்போம்.** இவைகளை முன்பதாகவே வாசகர்களாகிய உங்களுக்கு மட்டும் அறிவிக்கிறேன்.

இவைகளை குறித்து இப்படியெல்லாம் நான் எழுதுவதால் **நான் மரன சம்பந்தமான வியாதியில்** அகப்பட்டிருப்பதாகவோ, சீக்கிரம் **மரிக்க போகிறேன்** என்று எனக்கு வெளிப்பாடு கிடைத்ததாகவோ யாரும் நினைக்கவேண்டாம்! நான் தொடர்ந்து உங்கள் ஊர்களுக்கு, சபைகளுக்கு வருவேன், **தொடர்ந்து பிரசங்கிப்பேன்,** தொடர்ந்து **எழுதுவேன்.** அனால் **எவ்வளவு காலம்?,** எவ்வளவு **வருடம்?,** எவ்வளவு **வாரம்?,** எவ்வளவு நாள் ? என்று எனக்கு தெரியாது. **தெரிந்து கொள்ளவும் நான் விரும்பவில்லை.** ஆனால் சகல **ஆயத்தங்களோடும்** ஒவ்வொரு **நிமிடமும்** நான் **கர்த்தரின் பாதத்தில் சேர** ஆயத்தத்தோடு இருக்கிறேன். நீங்கள் ஆயத்தமாக இருங்கள்.

### என் குடும்பம் :

ஏற்கனவே நீங்கள் யாவரும் அறிந்தபடி எனக்கு 2 பிள்ளைகள் உண்டு, 1 மகனும் 1 மகளும் உண்டு. இருவரும் தனித்தனியாக **அவரவர்கள் வீட்டில்** பிள்ளைகளோடு குடியிருக்கிறார்கள். எல்லோரும் **டாக்டர்களாக** இருப்பதால் அவர்களுக்கு **பணக்குறை** இல்லை. எனக்குள்ள இரண்டு **வீடுகளையும்** இரண்டு வருடங்களுக்கு முன்பே **அவரவர்கள் பெயரில்** பங்குபிரித்து கொடுத்துவிட்டேன். ஆகவே என் **பிள்ளைகள்** விஷயத்தில் **நான் ஏதும் குறை** வைக்காமல் அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை **செய்து முடித்துவிட்டேன்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஆனால் இப்போது **எனக்கும்** என் மனைவிக்கும் **சொந்தமாக வீடு** என்று எதுவும் இல்லை. **மகளும்,** மருமகனும் **பெங்களூரில் செட்டில்** ஆகிய விட்டதால் அவர்களுக்கு நாங்கள் எழுதிக்கொடுத்த வீட்டில் தான் நாங்கள் கடந்த 84 வருடமாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அவர்களுக்கு **வாடகை எதுவும் கொடுக்காம**ல் எங்களின் **இருவரின் மரணம் வரை** இப்போது இருக்கும் அந்த பழைய வீட்டிலேயே குடியிருப்போம். ஜாமாக்காரன் **அலுவலகம்** வழுமையாக அதே வீட்டில் இயங்கவும், நாங்கள் இருவரும் இதே வீட்டில் **குடியிருக்கவும்** என் **மகளும்– மருமகன் Dr. பிரபுசிங்** அவர்களும் தங்கள் கைப்பட **எழுத்து மூலமாக** எங்களுக்கு எழுதிகொடுத்துவிட்டனர்.

இதற்காக **மகளுக்கும்** மருகனுக்கும் பேத்திக்கும் **நாங்கள் இருவரும்** நன்றி கூறுகிறோம். என் பிள்ளைகளுக்காகவும் அவர்கள் குடும்பத்துக்காவும் அதோடு எங்கள் இருவருக்காகவும் **இந்தியா,** மற்றும் **உலகமெங்கும்** உள்ள ஜாமக்காரன் **வாசக குடும்பங்கள்** யாவரும் உங்கள் ஜெபத்தில் நினைத்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். நன்றி. நாங்களும் தொடர்ந்து உங்கள் யாவருக்காகவும் வழக்கம்போல் ஜெபிக்கிறோம்.

**கர்த்தரின் கிருபை** நம் **மரணம்** அல்லது கர்த்தரின் **வருகை** வரை நம் அனைவரோடும் தங்கி நிலைத்திருப்பதாக. தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

குறிப்பு : இந்த 2023 வருடம் முழுவதும் **தமிழ்நாடு,**கேரளா, **இந்திய முழுவதும்** என் கூட்டங்களுக்கு **தேதி கொடுத்துள்ளேன்.** கடந்த மாத ஜாமக்காரனில் **ஒவ்வொரு வாரமும்** எங்கெங்கு **எந்த சபையில்** கூட்டங்கள் நடைபெறுகிறது என்பதை நீங்கள் அறியவும் ஜெபிக்கவும் வேண்டி ஜாமக்காரனில் வெளியிட்டிருக்கிறேன். அது போல இனி **நடக்கவுள்ள கூட்டங்களின்** விவரங்களையும் எழுதுவேன்.

குறிப்பு : 2023 நவம்பர் 20ம் தேதி முதல் 28ம் தேதிவரை அரேபியா தேசத்தில் மஸ்கட் என்னும் நாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளேன். இதை பற்றிய மற்ற விவரங்களை அறிய என்னோடு தொடர்பு கொள்ளவும். ஜெபிக்கவும், ஜெபிக்கிறேன்.

டாக்டர் **புஷ்பராஜ்**

## ONLINE BANKING (NEFT)

### Name : M G E PUSHPARAJ

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# BJP (காவி கட்சி)

# ஆளும் கட்சியின் படுதோல்வி





**கர்நாடகா** மாநிலத்தில் நடந்த தேர்தலில் **மத்தியிலும் அந்த மாநிலத்திலும்** ஆளும் கட்சியான BJP கட்சி **(பிரதமர் மோடி அவர்களின் கட்சி)** மிக பெரிய தோல்வியை தழுவியது. **இந்தியா முழுவதிலும் ஒரே கட்சி, ஒரே மதம், ஒரே மொழி** என்று கூறிவரும் இரட்டையரான **பிரதமர் மோடி அவர்களும்** மற்றும் **திரு. அமித்ஷா** அவர்களும் கூறிய **கொள்கைக்கு** பலத்த அடி ஏற்பட்டு **இரட்டையர்** இருவரும் **ஸ்தம்பித்து விட்டனர்**, இத்தனைக்கும் கர்நாடகாவில் 80 **சதவீதம் இந்து** மத மக்கள் இருந்தும் அந்த இந்து மதத்தினரே இவர்களுக்கு **பெரிய தண்டனை** கொடுத்து விட்டார்களே! . இந்த மாற்றம் இந்தியா முழுவதிலும் நடந்தால் நிச்சயம் **மிகப்பெரிய மாற்றம்** உண்டாகும்.

BJP கர்நாடகாவில் தோற்றதற்கு பல காரணங்களில் ஒன்று, திரு. **அமித்ஷா** அவர்கள் தேர்தல் கூட்டங்களில் பேசிய தீவிரவாத பேச்சாகும். அதாவது BJP கட்சி தோற்றால் **மத கலவரம் வெடிக்கும்** என்றார். இந்த வார்த்தை மக்களை சிந்திக்க வைத்தது. **மதத்தை வைத்து** இவர்களே **கலவரத்தை** உண்டாக்கி நாட்டின் அமைதியை கெடுத்துவிடுவார்களோ என்று பேசிக்கொண்டார்கள்.

அடுத்தது தோல்வியடைந்த BJP கட்சி முதல்வர் **பசவராஜ் பொம்மை** அவர்கள் **முஸ்லீம்** மாணவிகள் பள்ளிக்கு அல்லது கல்லூரிக்கு வரும்போது **ஹிஜாப்** அணித்து வரக்கூடாது என்றார். இது **சிறுபான்மை முஸ்லீம்களை** மிகவும் வெறுப்பு அடைய செய்தது. மேலும் இந்த கட்டளை **இந்தியா முழுவதிலும் பேச வைத்தது.** மேலும் இந்த பேச்சு உலக அளவிலும் பெரும் சர்ச்சையை உண்டாக்கியது.

கர்நாடகா தேர்தல் சமயத்தில் BJP ஆட்சி நடைபெறும் **மணிப்பூரில்** ஆதிவாசிகளில் இரண்டுவித இனத்தில் உள்ள **கிறிஸ்தவர்கள்** இடையில் **வன்முறை** வெடித்து **கிறிஸ்தவ ஆலயங்கள்** தீ வைத்து கொளுத்தப்பட்டன. இதில் கட்சியினரும் சேர்ந்து கி**றிஸ்தவர்களின் வீடுகளையே குறி வைத்து** தாக்கி தீ வைத்தனர்.

RSSம் **இந்து மத மக்களும்** ஆதிவாசி இன மக்களில் ஒரு கூட்டத்தாரோடு சேர்ந்து இப்படி அராஜகம் செய்தார்கள். **ஆதிவாசிகளாகிய** அந்த **கிறிஸ்தவர்கள்** தங்கள் ஆலயம் இடிக்கப்படும்போது. தங்கள் **வீடுகளை தீவைத்து** கொளுத்தும்போது **ஆதிவாசி கிறிஸ்தவர்கள்** தங்களை **காத்துக்கொள்ள** போராட்டகாரர்களை எதிர்த்து இவர்களும் தாக்கினார்கள். அப்படி **எதிர்த்து தாக்கின கிறிஸ்தவர்களை** BJP அரசாங்கம் **தீவிரவாதிகள்** என்று

கூறி துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார்கள். **ஆயிரக்கணக்கில் கிறிஸ்வர்கள்** கொல்லப்பட்டனர், **மணிப்பூர்** இன்னும் எரிந்துகொண்டுதான் இருக்கிறது. ஓட்டுபோட்டு BJP கட்சியை ஜெயிக்கவைத்த **மணிப்பூர் மக்கள்** தங்கள் தவறை உணர்ந்துகொண்டனர். **வீடு இழந்து** தன்சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழும் **மணிப்பூர்** மக்களின் நிலை மிகப் பரிதாபம். ஆனால் அதே சமயம் **காங்கிரஸ்** கட்சியைவிட **BJP கட்சி** மணிப்பூருக்கு சாலை வசதி முதல் **பல நல்ல சேவைகளை** செய்துள்ளது. அதனால் இனி இவர்களுக்கு இந்துமத **வெறியிருக்காது** என்று நம்பி BJPக்கு ஓட்டுபோட்டு ஜெயிக்கவைத்தார்கள். மணிப்பூரில் உள்ள **மெஜாரிட்டி** கிறிஸ்தவர்களை **இந்துத்துவ** கொள்கைகளை அவர்களுக்குள் தினித்து **கிறிஸ்தவர்களை முழுவதுமாக அழிக்க** இந்த சந்தர்ப்பத்தை **BJP காரர்கள்** பயன்படுத்திக்கொண்டார்கள்.

மொத்தம் 400 **கிறிஸ்தவ ஆலயங்கள்** இடிக்கப்பட்டு தீ வைத்து கொளுத்தப்பட்டன என்று கூறுகின்றார்கள். இந்த **செய்தியும்** சுடசுட **புகைப்படத்தோடு** கர்நாடகா தினசரி செயதித்தாள்களில் வெளிவந்ததால் **கர்நாடகா மக்களை** கலங்க வைத்தது. **காவி கட்சி** இந்து மதத்தின் பெயரால் **நாட்டின் சமாதானத்தையே** கெடுத்து விடுவார்கள் என்ற சந்தேகம் **இந்து மதத்தை** சேர்ந்தவர்களுக்கே உண்டானது.

அதோடு **மோடி** நாட்டின் எல்லா தொழிலையும், கம்பெனிகளையும் **அதானி** குடும்பத்துக்கு தாரை வார்த்து **விற்று விடுவாரோ** என்ற கேள்வி எங்கும் பேசப்பட்டது அந்த பயம்தான் கர்நாடகாவில் BJP தோற்க பெரும் காரணமாக அமைந்தது.

## மோடி அவர்களின் சொந்த மாநிலமாகிய குஜராத்தில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை

பா.ஜ.க. ஆட்சியின் முன் மாதிரியாக சொல்லப்படுகிற **குஜராத்** மாநிலத்தில் NRCB என்ற உலகலாவிய ஸ்தாபனம் தருகிற புள்ளி விவரமானது 2016-2020ம் ஆண்டு வரை குஜராத்தில் மட்டும் 41,621 பெண்கள் காணாமல் போனதாக **தேசிய குற்றப் பதிவு காப்பகம்** (NRCB) வெளியிட்டிருக்கும் புள்ளி விவரம் கூறுகிறது. மேலும்

| | | | |
|---|---|---|---|
| குஜராத்தில் | 2016ம் ஆண்டில் | 7,105 | பெண்களும் |
| | 2017ம் ஆண்டில் | 7,712 | பெண்களும் |
| | 2018ம் ஆண்டில் | 9,246 | பெண்களும் |
| | 2019ம் ஆண்டில் | 9,268 | பெண்களும் |
| | 2020ம் ஆண்டில் | 8,290 | பெண்களும் காணாமல் போயிருக்கிறார்கள். |

2019-2020 ஆண்டில் மட்டும் உள்துறை அமைச்சர் **அமித்ஷாவின்** தொகுதியான **அஹமபாத்திலும் பிரதமர் மோடி** தொகுதியான **வதோதரா** பகுதியில் மட்டும் 4,722 பெண்கள் தொலைந்து போயிருக்கிறார்கள். இது **வெளிநாட்டு உளவு ஸ்தாபனம்** கூறும் புள்ளி விவரம் அல்ல. இது 2021ம் ஆண்டு **சட்டப் பேரவையில்** அரசு சார்பில் அளிக்கப்பட்ட ஆதாரபூர்வ விவரம் ஆகும்.

- ☐ சமீபத்தில் இந்திய **பெண் மல்யுத்த விராங்களைகளிடம்** பாலியல் தொல்லை கொடுத்து அவர்களை கெடுக்க முயன்றதாக உள்ள குற்றச்சாட்டில் **மல்யுத்த கூட்டமைப்பின்** தலைவரான BJP கட்சியின் MP **பிரிஜ்பூஷன்** மீது பாலியல் குற்றச்சாட்டை போலீஸில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால்

பெண் மல்யுத்த வீராங்கனைகள் அத்தனைபேரும் டெல்லி **ஜந்தர் மந்தர்** பகுதியில் பல நாட்களாக உண்ணாவிரம் இருந்தும், சிலர் மயக்க நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டும், ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாலியல் குற்றம் சாட்டப்பட்ட நபர் **பா.ஜ.க. MP** பதவியில் இருப்பதால் **ஆளும் கட்சியான பா.ஜ.க.** அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பெண்களுக்கு இந்திய தலைநகரிலேயே பாதுகாப்பு இல்லாத நிலை. இவைகள் யாவும் **கர்னாடகா மாநிலத்தில்** கடந்த தேர்தலில் எதிரொலித்து பெரும் எண்ணிக்கையில் BJP தோற்றுப் போக காரணமானது.

- ☐ மேலும் BBC வெளியிட்ட **குஜராத்தில்** ஏற்பட்ட **கொடூர கொலைகள் சிறுபான்மையினர் வீடுகள்** கொளுத்தப்பட்டது அத்தனையும் BBC சேனலில் வெளியிட்டு இந்த கொடூர செயல்களுக்கு **பிரதமர் மோடியின் பதில் என்ன** ? என்ற தலைப்பில் TV சேனலில் வெளியிடப்பட்டது. அதை YouTube ல் பிடித்து கர்னாடகா மாநிலமெங்கும் QR Code மூலமாக வெளியிட்டு நாடே அவைகளை பார்த்தது. BJP மேல் மிக கோபமடைந்து **இந்து மதத்தினரே** திரு. மோடியின் **காவி கட்சியினருக்கு ஓட்டு போடாமல்** தோற்கடித்து தங்கள் வெருப்பை காண்பித்தனர்.

மேலும் இந்தியா எங்கும் **தமிழ் நாட்டை தவிர** வட இந்தியா எல்லை எங்கும் **கிறிஸ்தவர்கள் – முஸ்லீம்களை** குறிவைத்து தாக்கி வருகிறார்கள். கர்த்தரும் இவைகளை கவனித்துக்கொண்டுதான் வருகிறார். கர்த்தரின் பொருமைக்கு ஒரு எல்லை உண்டு. அவர் **ராஜாக்களை** தள்ளி – **ராஜாக்களை** ஏற்படுத்துகிறவர் அந்த மாற்றத்திற்காக இந்திய மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## இந்திய புதிய பார்லிமெண்ட் கட்டிட திறப்புவிழா

- ☐ இந்தியாவின் **புதிய பார்லிமெண்ட்** கட்டிடம் பல கோடிகள் செலவழித்து கட்டப்பட்டு திறப்பு விழாவிற்கு இந்தியாவின் **தலைமகள்** என்று அழைக்கப்படும் **ஜனாதிபதியை** அழைத்து திறப்பு விழா நடத்தாமல், அவர் தாழ்ந்த ஜாதி ஆதிவாசி பெண் என்னும் **சனாதன** பிராமண சட்டப்படி **ஜனாதியை திறப்பு விழாவிற்கே அழைக்கவில்லை.**
- ☐ மேலும் பார்லிமெண்ட் கட்டிட முன்வாசலில் இரண்டு **குரங்கு விக்கிரகங்களை** தெய்வமாக செதுக்கி வைத்து கட்டிடம் முழுவதும் **இந்துமத சிலை** தெய்வங்களை செதுக்கி வைத்துள்ளார்கள்.
- ☐ சிலை வணக்கத்தை வெறுக்கும் **நம் தெய்வத்தின் பொருமைக்கு** ஒரு எல்லை உண்டு. இதே மாதத்தில் ஆசியாவிலேயே இதுவரை காணாத அளவு **ஒரிசா மாநிலத்தில்** ஒரே நேரத்தில் 3 ரயில்கள் ஒரே இடத்தில் விபத்துக்குள்ளாகி மரித்தவர்கள் எண்ணிக்கை ஆயிரத்தை நெருங்குகிறது. **தேவ கோபம்** இன்னும் என்னென்ன ரூபத்தில் காண்போமோ?
- ☐ **செங்கோல் :** புதிதாக செங்கோல் தங்கத்தால் செய்து அதன் முனையில் **நந்தி விக்கிரகத்தை** பொருத்தி திரு. **மோடி கையில் கொடுத்தார்கள்.** அரசாங்கத்தில் **சர்வாதிகார ஆட்சியின் அடையாளம் செங்ககோல்** ஆகும். ஆனால் நம் நாடு **ஜனநாயக நாடு.** இந்தியாவுக்கு எதற்கு **செங்கோல்** அதிசீக்கிரம் **திரு.மோடி அவர்கள்** சர்வாதிகாரியாக மாறப்போகிறார் என்பததை சூட்சகமாக மக்கள் தெளிவாக்கி பேசுகிறார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் ஜெபிப்போம். **யுத்தம் என்னுடையது** நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்று நம் ஆண்டவர் கூறியிருக்கிறார். ஜெபிப்போம்.

# கேள்வி? பதில்!



Bro D.G.S. Dhanakaran

**கேள்வி :–** இயேசு **அழைக்கிறார்** கூட்டங்கள் இப்போது எங்கும் நடப்பதில்லையே ஏன் ?

## ஆவியில் ஆரம்பித்து மாம்சத்தில் முடித்த இயேசு அழைக்கிறார் குடும்பம்



Bro Paul Dinakaran

**பதில் :–** இயேசு அழைக்கிறார் **ஊழியங்களுக்கு** மக்கள் அனுப்பும் **காணிக்கைகள் தங்க கட்டிகளாகவும்,** கோடிக்கணக்கான ரூபாய்கள் **காருண்யா கெஸ்ட் ஹவுசில் பதுக்கப்பட்டதையும் அமலாக்க துறையினரும், இன்கம் டாக்ஸ் துறையும்** கண்டு பிடித்ததையும் அவர்கள் இயேசு அகைக்கிறார் முழு குடும்பத்தையும் **விசாரனை வளையத்துக்குள்** கொண்டுவந்து, **பாஸ்போர்ட்** அனைத்தையும் வாங்கிவைத்துக்கொண்ட விவரங்களை **தினசரி செய்திதாள்களிலு**ம் TV சேனல்களிலும் மக்கள் **கண்டபின்** இயேசு அழைக்கிறார் கூட்டத்தை **பொது மைதானத்தில்** வைத்தால் யார் வருவார்கள்?, மக்கள் **அந்த பண ஊழலை** இன்னும் மறக்கவில்லை.

**நாகாலாந்தில்** இயேசு அழைக்கிறார் பொதுகூட்டம் நடத்தினார்கள். இந்தியாவின் **வட கோடியிலுள்ள** அந்த மக்களுக்கு **தங்கக்கட்டிகளும்** 125 **கோடி ரூபாய் பதுக்கிய** விவரமும் அவர்கள் அறியவில்லையோ! என்னவோ! தெரியவில்லை. கூட்டம் நடந்தது ஆனால் தேவ பிரசன்னம் இல்லையே. அந்த கூட்டம் பெரும் தோல்வியில் முடிந்தது. கூட்டத்தை நடத்தியவர்கள் மிக நல்ல கிறிஸ்தவர்கள், மிக நல்ல ஏற்பாடுகளை செய்தும் **தேவ பிரசன்னம்** நீங்கிபோனால் கூட்டம் நடத்தி என்ன பயன். .

## அந்நிய நுகத்தில் இணைக்கப்பட்டு சாட்சியிழந்த பால் தினகரனின் மூத்த மகள்

மேலும் தம்பி பால் தினகரனின் **மூத்த மகளின்** (Sharan Paul) சிலரோடுள்ள இரகசிய

தொடர்புகளை தமிழ்நாட்டிலேயே கண்ட பெற்றோர் அவளை வீட்டைவிட்டு வெளியேற்றி கனடா நாட்டுக்கு அனுப்பினார்கள். அவள் **கனடா – கலிபோர்னியா** நாடுகளில் சென்று தன் **சொந்த காலில்** நிற்க சொந்தமாக தொழில் தொடங்கிவிட்டார். **இயேசு அழைக்கிறார்** குடும்பத்துக்கு இது **பெரும் அடி** ஆகும்.

அதுமட்டுமல்ல YouTube வழியாக அந்த **மூத்த மகள் ஷேரன்** பேட்டி கொடுத்தார். தான் இப்படியானதர்க்கான காரணத்தை குறித்து **தன்னிலை விளக்கத்தை** வெளிப்படையாக கூறியதை **உலகமே கண்டது.** அதில் **தன் முகவரியில் த**ன்னைபெற்ற **தகப்பனார்** பெயரான **பால் தினகரன்** என்ற பெயரை **தன் பெயரிலிருந்து** நீக்கி **இயேசு அழைக்கிறார்** குடும்ப முகவரியையும் நானே மாற்றிக்கொண்டேன். என் தகப்பனார் Dr. பால் தினகரன் அவர்கள் பெயரை என் பெயரோடு சேர்க்க **நான் விரும்பாத** அளவு அவர் நடந்துகொண்டார்.


Mrs. Sharon Paul Dinakaran

மேலும் தன் **தகப்பனாலும்,** தன் குடும்பத்தாலும் தான் அனுபவித்த **டார்ச்சர்களையும்** கொடுமைகளையும் குறிப்பிட்டு மிக தெளிவாக பேசினதை நானே கேட்டேன். தன் தங்கையின் திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சிக்கும் அவள் வரவில்லை. தங்கையின் திருமணமும் ஏறக்குறைய காதல் திருமணம்தான். மூன்று வருடம் மாப்பிள்ளையுடன் **பாடல் குழுவினராக** பல இடங்களுக்கு சென்று நிகழ்ச்சிகள் நடத்தும்போது ஏற்பட்ட பழக்கம். நல்லவேளை **சின்ன மகளுக்கு** கிறிஸ்தவ குடும்பத்தில் **திருமண ஏற்பாடு செய்யப்பட்டது.**

மூத்தவள்போல் தங்கை **அந்நிய நுகத்தில்** இணைக்கப்படவில்லை. ஆனால் **மூத்த மகள்** கூறும் விளக்கம் என் பெற்றோரின் **நாடார்** என்ற ஜாதி வைராக்கியம். டவுரி. ரொக்கம் போன்ற அவர்கள் **கலாச்சாரத்தில்** எனக்கு ஒப்புதல் இல்லை. ஆகவே வீட்டைவிட்டு வெளியேறினேன் என்று அவள் கூறியது **பொய்யான விளக்கம்** அகும் என்பது எனது கணிப்பு. இந்த பெண் தான் கூறிய விளக்கத்தில் இவர் கல்லூரியில் படிக்கும்போதே **சாட்சியில்லாத பல தவறுகளை** செய்ததை மறைத்துள்ளார்.

- ☐ **தேவ பிரசன்னம்** நீங்கும்போது அடுத்து அடுத்து பலவித பிரச்சனைகள் வந்தது. நாட்கள் கடந்து சென்றன. **வெளிநாட்டு ஊழியம்** ஆரம்பிக்கலாம் என்று பால் தினகரன் **இலங்கைக்கு** குடும்பமாக சென்றார்கள். ஆனால் அவர்கள் இலங்கையில் இறங்கி மறுநாள் வேறு ஒரு இடத்துக்கு ஊழியம் செய்ய சென்றபோது **இலங்கை அரசாங்க போலீஸ்** அவர்கள் காரை பாதி வழியில் நிறுத்தி **பாஸ்போர்ட்டை** பிடுங்கிகொண்டு அப்படியே அவர்களை **விமான நிலையத்துக்கே திருப்பி அனுப்பிவிட்டனர்.** இந்திய அரசாங்கத்திலிருந்து வந்த செய்திதான் இலங்கை அரசாங்கம் இலங்கையில் ஊழியம்

செய்யாதபடி **இந்தியாவுக்கே திருப்பி அனுப்ப காரணம் என்று கூறுகிறார்கள். பால் தினகரன் குடும்பத்துக்கு இது** பெருத்த அவமானமாகிபோனது. எந்த ஊழியருக்கும் இப்படிப்பட்ட அவமானம் நிகழவில்லை, வேதம் கூறுகிறது **என்னை அசட்டை செய்பவர்கள் கனஈனப் பண்ணப்படுவார்கள்** என்கிறது. 1 சாது 2:30

## இப்படிப்பட்ட அவமானங்கள் இயேசு அழைக்கிறார் குடும்பத்துக்கு ஏன் வந்தது ?

Dr. பால் தினகரனன் தகப்பன் சகோ. **D.G.S. தினகரன்** அவர்கள் **இயேசுவை அறிவிக்கும் ஊழியத்தை**விட்டு தன் **அற்புதமான அழைப்பின்** நோக்கத்தையும்விட்டு தன் **மகனின் பிற்கால வாழ்க்கைக்காக** ஒரு **தொழிலை** தொடங்கினார். அதுதான் **காருண்யா கல்லூரி என்ற கல்வித்தொழில். அது** பெருத்த வருமானம் கொழிக்கும் தொழிலாக மாற்ற **கல்லூரியை யுனிவர்சிட்டியாக மாற்றினார்.** இப்படிப்பட்ட தொழில்களை கவனிக்க **மகனை** என்ற வியாபாரங்களையும் கம்பெனிகளையும் நிர்வகிக்கும் M.B.A., பட்ட **படிப்பை படிக்கவைத்தார்.**

### சகோ. தினகரன் கூறிய முதல் பொய்

**தன் ஊழியத்தை** மகன் தொடரும் நோக்கம் இருந்திருந்தால் மகன் பாலை **வேதாகம கல்லூரிக்கு** அனுப்பியிருக்க வேண்டும். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை.

☐ தகப்பன் கல்லூரிக்கு பணம் சேர்க்க **கடவுள் பெயரை** சொல்லி **கர்த்தர் சொன்னார்** என்ற **முதல் பொய்யை** கூற தொடங்கினார். அதாவது ஒரு குழந்தைக்கு 2000/- ரூபாய் வாங்கும் **இளம்பங்காளர்** என்ற திட்டத்தை பற்றி அறிவித்து இதை **இயேசுவே நேரில் என்னிடம் கூறினார்** என்று இரண்டாவது **பெரும் பொய்யை** கூற தொடங்கிய உடனே **உண்மையான கிறிஸ்தவ** மக்கள் **விழித்துக் கொண்டார்கள்,** அவரை தெய்வம் போல் நேசித்தவர்கள் அவரை விட்டு விலகி சிலர் **வேத வசனத்துக்கு** திரும்பினர். சிலர் இவரின் சீஷனான சகோ. தினகரனை போல் **பொய் தீர்க்கதரிசனம்** கூறும் **நாலுமாவடி மோகன் லாசரஸ்** பக்கம் இணைந்தார்கள்.

### மற்றொரு பொய்யையும் கூறினார்

என்னை போன்ற ஊழியர்கள் பலர் சகோ. தினகரனை நேரில் சென்று எச்சரித்தனர். அவர் செவி சாய்க்கவில்லை. வருமானம் பெருக்க **பெதஸ்தா** அல்லது **வானத்தின் வாசல்** என்று காருண்யா கல்லூரி பக்கத்திலேயே **ஒரு இடத்தை குறிப்பிட்டு** வானத்திலிருந்து தூதன் இங்குதான் இறங்கினான் என்று அந்த திட்டத்தை **பெதஸ்தா திட்டமாக** அறிவித்து அங்கு குளம் அமைத்து ஒரு **தூதன் சிலையை** வைத்து அந்த குளத்தை காண வரும் மக்கள் பணம் போடும் வகையில் ஏற்பாடுகளை செய்தார். **வேளாங்கனிபோல் ஒ**ரு புனித ஸ்தலமாக அதை அறிவித்தார்.

## பணக்காரர்களை கவர பணம் பிடுங்க தங்க சாவி திட்டத்தை அறிவித்தார்

☐ **பெரும் பணக்காரர்கள்,** கோடீஸ்வர்கள். பெரும் **தொழிலதிபர்களை** கவர்ந்து அவர்களிடமிருந்து **காணிக்கை பெரும் ஒரு குருக்குவழியை** தெரிந்தெடுத்து அதையும் **கர்த்தர் சொன்னார்** என்று பழியை இசேுவின்மேல் போட்டு **தங்க சாவி** என்ற திட்டத்தை அறிவித்தார். அந்த **தங்க சாவி** யை **ஒரு லட்சம்** அல்லது அதற்குமேல் பணம் கொடுத்து வாங்கி **முதலாளிகள்** தாங்கள் அலுவலகத்தில் **தாங்கள் அமரும் சேர்க்கு மேல்** மாட்டிவைத்தால் **பணம் பெருகும்,** வியாபாரம் **விருத்தியாகும்** என்றெல்லாம் கர்த்தர் சொன்னார் என்று புளுகினார். ஊழிய வியாபாரம் விருத்தியாக அந்த தங்க சாவியை **ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து** முதலாவது வாங்கியது யார் தெரியுமா ? தினகரனின் சிஷனும் நாலுமாவடி **மோகன் சி. லாசரஸ்** என்று அழைக்கப்படும் பிரபல ஊழியர் ஆகும்.

ஆனால் அவர் எதிர்பார்த்தபடி பெரும் பணக்காரர்களுக்கான இந்த **கள்ள திட்டத்தை** சகோ. தினகரனின் நெருங்கின நண்பர்களே அதை நம்பவில்லை. **தங்க சாவி** எதிர்பார்த்தபடி விற்பனையாகவில்லை. **திட்டம் படுதோல்வி** அடைந்தது என்றாலும் இவரின் விசிறிகளான **சில முட்டாள் கிறிஸ்தவ வியாபாரிகள்** அந்த சாவியை **லட்ச ரூபாய் கொடுத்து** வாங்கினார்கள். எத்தனை பெரிய துணிகரமான **கள்ள வியாபார அறிவிப்பு** பார்த்தீர்களா! இத்தனை ஆழமான தேவ மனுஷன் இவ்வளவு **தரம் கெட்ட** இப்படிப்ட்ட அறிவிப்பை எப்படி அறிவிக்க துணிந்தார்?.

☐ எல்லாவற்றிக்கும் **சிகரம் வைத்தாற்போல்** சகோ. தினகரனும் மகனும் இயேசுவுக்கு மிகப்பெரிய துரோகம் செய்தார்கள். அதாவது **காருண்யா** புனிவர்சிட்டியை **டீம்டு Deemed** Univercity ஆக்க சிபாரிசுக்காக **காஞ்சி சங்கராச்சாரியை** நேரில் சந்திக்க**,** சினமா நடிகர் S.V. சேகர் என்பவர் சிபாரிசுடன் காஞ்சி சங்காராச்சாரியாரை நேரில் சென்று கண்டு விவரம் அறிவித்து BJP அரசின் மத்திய கல்வி அமைச்சருக்கு சிபாரிசு செய்ய வேண்டிக் கொண்டார். அதற்கு பரிசாக **சுத்த வெள்ளியினால்** ஆர்டர் செய்த **பூஜை சாமான்கள்** அடங்கிய பெட்டி ஒன்றை அந்த மடாதிபதிக்கு பரிசாக கொடுத்து புறப்படும்போது **தலைகுனிந்து சங்கராச்சாரியாரின்** ஆசிபெற்று திரும்பினார். **இது இயேசுவுக்கு செய்த துரோகம் அல்லவா?** இவரே **விக்கிரகத்துக்கு பூஜை செய்ய** வசதி செய்துகொடுத்தார். பொதுவாக **மற்ற மதத்தினரை** காணும் போது பரிசாக **பைபிள்கொடுப்பது** வழக்கம். ஆனால் இவரோ **பூஜை பெட்டியை** கொடுத்து வந்தார். உடனே சிஷன் **மோகன் சி. லாசரஸ்** TVயிலும் தன் பத்திரிகையிலும் உண்மையான ஊழியர், சகோ. தினகரனை குறித்து பொய்யான குற்றச்சாட்டு டாக்டர் புஷ்பராஜ் கூறினார். ஆகவே அவர்மேல் **சாபம் வரும்.** மிரியாமின் குஷ்டம் வரும் என்றெல்லாம் கூறினார். உடனே நான் அவர் பூஜை பொருட்களை கொடுத்ததற்கு ஆதாரமான **புகைப்படங்களை** வட இந்தியா சென்று வாங்கி வந்து **ஜாமக்காரனில் வெளியிட்டேன்.** ஒரு **பொய்** – மற்றொரு **பொய்க்கு** சிபாரிசு செய்த கதையாகி **மோகன் சி. லாசரஸ்** அவமானபட்டுப்போனார். குரு எப்படியோ சிஷன் மோகன்

சி. லாசரஸ்சும் அப்படியே. ஏராளமான **பொய்** தீர்க்கதரிசனங்களை அவிழ்த்துவிட்டு கொண்டேயிருக்கிறார்.

சகோ. தினகரன் மரிக்கும் வரை **பல கள்ள அறிவிப்புகளை** ஒன்றன்பின் ஒன்றாகய் அறிவித்தார். இது மகா துணிகரமாகும்.

வசனம் கூறுகிறது **நீ யாருக்கு அஞ்ஜிப் பயப்படுகிராய் !**
**நீ பொய் சொல்லுகிறாயே !**
**நீ என்னை நினையாமலும் உன் மனதிலே வைக்காமலும் போகிறாய்**
**நான் வெகு காலம் மவுனமாயிருந்தேன் அல்லவா!**
**ஆகையால்(தான்) எனக்கு பயப்டாதிருக்கிறாய்.** ஏசா 57 :11
**அவர்களுக்கு மாறுதல்கள் நேரிடாததினால்**
**அவர்கள் தேவனுக்குப் பயப்படாமல் போகிறார்கள்** சங் 55:19

மேற்கண்ட வசனத்தின்படி கர்த்தர் பல முறை சகோ. D.G.S. தினகரன் குடும்பத்தை எச்சரித்தும் தன் **பொய்யான கள்ள திட்டங்களை** செயல்படுத்துவதை நிறுத்தவில்லை. வேதம் கூறுகிறது **ஆவியானவர் மனிதனோடு எப்போதும் பேராடுவதில்லை** பல முறை போராடியும் சகோதரன் **கர்த்தரின் வசனத்தை** அலட்சியம் செய்தார். இந்த நேரத்தில் தான் கர்த்தர் தன் கோபத்தில் இவரை **தண்டிக்க தனது இரண்டாவது ஆயுதத்தை** கையில் எடுத்தார். **முதல் ஆயுதம்** கிருபையின் ஆயுதம் கிருபையால் எச்சரித்து கூறிபார்த்தும் கீழ்படியாமல் போனதால் கர்த்தர் தன் **இரண்டாம் ஆயுதம் எடுத்து உபயோகித்தார்.** அதுதான் கோர கார் விபத்து. சென்னை விமான நிலையத்தில் **கார் விபத்தில்** கார் அப்பளம் போல் நொருங்கியது. டிரைவரோடு தன் **ஒரே செல்ல மகள் ஏஜ்ஜலின்** விபத்து நடந்த அதே இடத்தில் **செத்து மடிந்தார்கள்.** காயங்களோடு உயிர் பிழைத்தது சகோ. D.G.S. தினகரனும் அவர் மனைவி **ஸ்டெல்லா தினகரனும்** மட்டுமே. மகள் கோர விபத்தில் அகப்பட்டு செத்ததின் மூலம் கர்த்தர் உன்னோடு பேசுகிறார். ஆகவே காருண்யாவை டையோசிஸ்க்கு கொடுத்துவிட்டு ஊழியத்துக்கு திரும்பு என்று தேவ மனிதன் **பாஸ்டர் சுந்தரம்** அவர்கள் சகோ. தினகரன் வீட்டுக்கு சென்று எச்சரித்தார். ஆனால் அவர் கீழ்படியவில்லை.

இவ்வளவு கொடூரங்கள் இவர் வாழ்க்கையில் நடந்தபின் **இவர் திருந்துவார்** என்று கர்த்தர் எதிர்பார்த்தார். ஒரு மாற்றமும் ஏற்படவில்லை.

## மற்றொரு கள்ள ஊழிய திட்டம்

மறுபடியும் **ஜெப கோபுரங்கள்** என்ற பெயரில் பணம் பறிக்கும் புது **கள்ள திட்டம்** ஒன்றை தொடங்கினார். அதையும் **கர்த்தர் கூறினார்** என்று **அதே மாதிரியான பொய்யை** கூறி **கோடிக்கணக்கான** பணம் திரட்டி இந்தியாவில் பல பெரிய நகரங்களிலும் உலக நாடுகளிலும் இஸ்ரவேல் தேசத்தில் **எருசலேமிலும்** பல லட்சம் **பில்லியன்கள்** செலவு செய்து **நிலம் வாங்கி** பல **அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டி** அதில் **ஒரே ஒரு அறையை** மட்டும் **ஜெப அறையாக**

**மாற்றினார்.** மற்ற 27 அடுக்கு கட்டிடத்திலும் பல்வேறு **உலக தொழிலதிபர்கள் கம்பெனியின் அலுவலகங்களையும்** பெரிய ஹோட்டல்களும் உண்டாக்கி மகனுக்கும் குடும்பத்துக்கும் **நிரந்தர வாடகை** கோடி கணக்கில் **வருமானமாக கிடைக்க ஏற்பாடு செய்தார்.**

இன்றைக்கு இந்தியாவின் **டெல்லி** முதல் பல்வேறு மாநிலங்களில் **ஜெப கோபுரம்** என்ற பெயரில் வாங்கிய **கோடிக்கணக்கான** விலையுள்ள **நிலம் கட்டிடங்கள் சொத்துக்கள்** அதிலிருந்து கிடைக்கும் **வாடகை வருமானம்** யாவும் இப்போது உயிரோடு இருக்கும் தம்பி **பால் தினகரனுக்கே** என்றாகிறது என்று கூறுகிறார்கள். அதனால்தான் கிடைக்கும் கோடிக்கணக்கான பணத்தையும், டாலர்களையும் **கணக்கில் காட்டாத கருப்பு பணம்** யாவும் **தங்க கட்டிகளாகவும்** ரூபாய் நோட்டு கள் **அடங்கிய மூட்டைகளாகவும்** காருண்யா கல்லூரி **கெஸ்ட் ஹவுஸில்** மறைத்து வைத்ததால் **இந்திய அரசாங்கம்** பால் தினகரனை கையும் களவுமாக பிடித்தது.

## மகன் பால் தினகரன் கூறிய உலகமகா பொய் சம்பவம்

சகோ. **D.G.S. தினகரன்** அவர்களுக்கு **இருதய அறுவை** சிகிச்சை பலமுறை நடத்த வேண்டிய தானது. **கிட்னி பாதிக்கப்பட்டு** செயலிழந்தது. பலமுறை **அமெரிக்காவில் கிட்னி விலைக்கு வாங்கி** பெருத்தப்பட்டது. ஒன்றும் இவர் உடம்பில் **பொருந்தவில்லை.** முடிவு வந்தது சென்னையில் பிரபல ஆஸ்பத்திரியில் அவர் உயிர் பிரிந்தது.

### தகப்பன் எவ்வழியோ மகனும் அவ்வழி

தகப்பன் **D.G.S.** தினகரன் மரித்து சவப்பெட்டியில் வைக்கப்பட்டது. இந்த சமயத்தில் மகன் **பால் தினகரன்** கூறிய உலக மகா பொய் கூறியதை **சவ அடக்க வீடியோவில் கண்டோம்.** தகப்பன் மரித்த உடன் மகன் பால் தினகரன் கூறினார் தான் கர்த்தரிடம் அழுதாராம். **அப்பாவின் அடக்க ஆராதனை** நடத்த அவ்வளவு **பெரிய தொகைக்கு, பணத்துக்கு** நான் எங்கு போவேன் என்று கூறி அழுதார். **அதை அடக்கம் செய்யும்** சில மணி நேரத்துக்கு முன் கூற **உடனே சவ பெட்டிக்கு** அருகில் அமர்ந்திருந்த **பால் தினகரனிடம்** துக்கம் விசாரிக்க வரிசையில் வந்தவர்கள் அனைவரும் அடக்கம் செய்யகூட பணம் இல்லை என்றீர்களே. ஆழவேண்டாம் என்று கூறி வந்தவர்கள் அனைவரும் அவருக்கு ஆறுதல் கூறி **கலியாணத்துக்கு மொய் பணம் கொடுப்பார்களே** அப்படி ஒவ்வொருவரும் பணத்தை கத்தை கத்தையாகவும் கவரில் வைத்தும் பால் தினகரன் கையில் திணித்துவிட்டு போனார்கள். பாவம் **தினகரனின் மகன் எவ்வளவு பெரிய ஏழை பாருங்கள் ! நடிப்பு என்றால் சிவாஜி கணேசன் தோற்றார்.** பெற்ற **தகப்பனை அடக்கம்** செய்ய **செலவுக்கு கூட பணம் இல்லை** என்ற இத்தனை பெரிய பொய் கூறியதை **பலர் வீடியோ எடுத்து** கொண்டிருக்கும் போதே இவர் **கூச்சமோ, வெட்கமோ** இல்லாமல் கூறியது துணிகரமாக **பொய்** அல்லவா ! அந்த வீடியோவை **இந்தியா முழுவதும்** பார்த்தனர்.

**இயேசு அழைக்கிறார்** குடும்பத்தில் **தகப்பனும் மகனும்** இவ்வளவு தரம் தாழ்ந்து **சாட்சி இழந்த குடும்பமாகியது.** குடும்பத்துக்கு **தலை குனிவுக்கு** மற்றோரு **காரணம். மூத்த மகள்** வாழ்க்கை மூலமாகவும் குடும்பத்துக்கு **தலைகுனிவு** ஏற்பட்டது. தகப்பனும் மகனும் **பண விஷயத்தில்** கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவின் மனதை** எத்தனையாய் நோக வைத்து விட்டனர். இவைகள் தான் **தேவ கோபம்** இயேசு அழைக்கிறார் குடும்பத்தின்மேல் இறங்க காரணமானது.

மேலே நான் எழுதியது **பழைய சம்பவம்தான்.** ஆனால் **இரண்டு தலைமுறை** தாண்டி **இன்றைய தலைமுறை மக்களுக்கு** குறிப்பாக **புதிய ஜாமக்காரன் வாசகர்களுக்கு இவர்களைப்பற்றிய விஷயம் தெரியாது.** இவர்கள் அறிய வேண்டியே இதை எழுதினேன். எனக்கு **இயேசு அழைக்கிறார்** குடுத்தினர் மீது **பகையோ,** பொறாமையோ இல்லை. இப்போதுள்ள புதிய சந்ததியும், பழைய சந்ததியும் சகோ. D.G.S. தினகரனை **விக்கிரகமாக்கி தெய்வத்துக்கு** சமமாக பாவித்து **அதிகாலையில்** அவர் பாடலை **ஸ்பீக்கரில் போடு கேட்டபின்தான்** அன்றைய வேலையை **தொடங்குகிறார்கள்** பலர் அவர் **பாடலை காரில் போட்டு** கேட்காமல் தொழிலுக்கு புறப்படுவதில்லை.

இப்போது இவர்கள் **இயேசு அழைக்கிறார்** கூட்டத்தை பொது மைதானங்களில் நடத்தாமல் **கோயமுத்தூர்** காருண்யாவில் உள்ள **பெதஸ்தா** மண்டபத்தில்தான் நடத்துகிறார்கள். கூட்டத்துக்கு வருகிறவர்கள் தனி ஜெபத்துக்கு வரிசையில் வரும்போது துணைக்கு **பால் தினகரனின்** மனைவியும் சேர்ந்து நின்று **தனி ஜெபத்துக்கு காணிக்கை கவரோடு** வருகிறவர்களை வரிசையாக நிற்க வைத்து ஒவ்வொருவராக **பால் தினகரனிடம்** வரும்போது **நீண்ட கவரை** அவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டு **அதன்பின்தான் பால் தினகரன்** அவர்கள் தலையில் கை வைத்து ஜெபிக்கிறார்.

இப்போது **D.G.S. தினகரன்** அவர்கள் அந்த காலத்திலேயே கைவிட்ட **தலையில் மிருதங்கம்** அடிப்பதுபோல் ஒவ்வொருவர் தலையிலும் **கைவிரலை ஆட்டி ஜெபிப்பதை இப்போது மகன் பால் தினகரன் துடங்கி உடுக்கை அடிக்க ஆரம்பித்துவிட்டார். பரிசுத்த ஆவி** கை வழியாக வரும்போது விரல்கள் **தவில்** அடிப்பது போல் **தானே ஆடுமாம்.** இந்தமுறையை அன்றே சகோ. **தினகரன் நிறுத்திவிட்டார்.** இப்போது மகன் **தகப்பனின் ஜெபிக்கும் முறையை** மீண்டும் **போலியாக ஜெபிக்கதெடங்கிவிட்டார்.** எப்படியோ ஒரு கையில் **காணிக்கை நிறைந்த வெள்ளை கவர்** மறுகையில் **மிருதங்கம்** வாசிப்பதுபோல் ஜெபித்து அனுப்புகிறார். இதற்கு **மனைவியும் பக்க துணையாக** நின்று ஊணிக்கை **கவரை தவறவிடாமல்** பார்த்துக்கொள்கிறார்.

## பால் தினகரன் மனைவி ஏஞ்ஜலின் கூறிய மகா பெரிய பொய்

**லிதியா பெண்கள் ஐக்கிய கூட்டம்** ஒன்றில் திருமதி **ஏஞ்ஜலின்** பிரசங்கம் செய்யும்போது அழுதுகொண்டு பேசும் இயற்கையான குரலில் பேசியதாவது.. யாரோ சொல்லி இந்த செய்தியை இதை எழுதவில்லை. நானே வீடியோவில் கேட்டேன். **பொய்** பேசுவதில் **மாமனார்,**



**தன் கணவர்,** ஆகியோர் மட்டுமே தேறினவர்கள் அல்ல. இவர்களோடு சேர்ந்து நானும் **பொய் பேச பழகிகொண்டேன்,** பொய் பேசுவதில் நானும் அவர்களுக்கு சலைத்தவர் அல்ல என்பதைபோல் பேசினார்.

***அவர் பேசியதாவது :–*** அன்பானவர்களே, இன்று **இயேசு அழைக்கிறார்** ஊழியத்தைப்பற்றி அது **பணக்கார** ஊழியம், காணிக்கை அவர்களுக்கு தேவையில்லை என்று கூறுகிறார்கள். அப்படியே அதை ஏழை ஊழியர்களுக்கு காணிக்கை கொடுங்கள் என்று மிகவும் தவறாக எங்களை குறித்து பேசுகிறார்கள்.

உண்மையில் சொல்லப்போனால் எங்கள் **வங்கி பேங்க பேலன்ஸ்** எவ்வளவு தெரியுமா? **O சைபர் தான்.** எங்கள் வங்கி கணக்கில் பணமே இலலை. இப்படிப்பட்ட எங்களை **பணக்கார ஊழியம்** என்று வதந்தியை பரப்புகிறார்கள்.

அன்பான வாசகர்களே ! என்ன பரிதாபம் பாருங்கள் ! **அனனியா – சப்பிராள்** போல் துணிகரமாக ஆவிக்குரிய கூட்டத்தில் **ஆவியானவருக்கு** முன்பு **பகிரங்க பொய்** பேசும் தைரியம் இவர்கள் **இருதய கடினமாகிவிட்டது என்பதைத்தன்** காண்பிக்கிறது.

மேலும் **ஏஞ்ஜலின் கூறுகிறார்: இயேசு அழைக்கிறார்** ஊழியத்துக்கு **காணிக்கை** கொடுக்க உங்கள் கணவரோ, பெற்றோரோ தடுத்தால் **அவர்களுக்கு தெரியாமல்** பணம் அனுப்புங்கள்! **அது பாவமல்ல.**

எத்தனை படுபயங்கரமான ஆலோசனை இது. ஒரு கிறிஸ்தவ பெண்ஊழியக்கார மனைவி பெண்களுக்கு கொடுக்கும் ஆலோசனையா இது ! கணவனுக்கு தெரியாமல் கொடுப்பது **திருட்டுத்தனமல்லவா !** இப்படிப்பட்ட ஊழியக்காரி **கணவன் பாக்கெட்டிலிருந்து** பணம் திருடவும் கற்றுத் தருவாள். எச்சரிக்கை! இதை வாசிக்கிற நீங்கள் எத்தனை ஆழமான விசுவாசியாக இருந்தாலும் கணவன் அல்லது மனைவி அல்லது பெற்றோருக்கு தெரியாமல் யாருக்கும் காணிக்கை கொடுக்காதீர்கள்.

கடந்த மாதம் தூத்துக்குடி டூவிபுரம் CSI கன்வென்ஷனில் பேசினேன். ஒரு சகோதரி டாக்டர் என் கணவர் கிறிஸ்தவர்தான். ஆனால் ஆராதனைக்கு போக, கன்வென்ஷனுக்கு போக என்னை அனுமதிக்க மாட்டார். இன்றைக்கும் நான் **பொய் சொல்லி** கணவருக்கு தெரியாமல்தான் **உங்கள் கூட்டத்துக்கு** வந்தேன் என்று கூறி அழுதார். நான் கூறினேன், மகளே ஒரு நாளும் உங்கள் கணவருக்கு பிடிக்காததை உண்மையான மனைவி செய்யக்கூடாது. அது நல்ல காரியமானாலும் கர்த்தருக்கு பிடிக்காது. அதற்கு பதில் கணவருக்காக உபவாசம் செய்து அவர் மனம் திரும்ப ஜெபியுங்கள். அவராக என்னை


**ஆராதனைக்கு** செல்ல, கூட்டங்களுக்கு செல்ல அனுமதிக்க அவர் **மனதை மாற்றும்** ஆண்டவரே என்று ஜெபியுங்கள். இது கர்த்தருக்கு பிரியமான காரியமானபடியால் நிச்சயம் கர்த்தர் **உன் கணவர் மனதை மாற்றுவார்.** நானும் உங்களுக்காக ஜெபிக்கிறேன் என்று கூறி ஜெபித்து அனுப்பினேன்.

இப்படி நான் ஆலோசனை கொடுக்கும்போது **திருமதி ஏஞ்ஜல் பால்** வீட்டுக்கு தெரியாமல் **இயேசு அழைக்கிறார்** ஊழியத்துக்கு பணம் அனுப்புங்கள் என்று தவறான ஆலோசனை கொடுக்கிறார்களே இவர்களையெல்லாம் **பெண்கள் ஐக்கிய** சங்க கூட்டங்களின் பேச எப்படி அழைக்கிறார்கள்?. ஆபத்தாயிற்றே.!

பேங்கில் எங்களுக்கு **0 பேலன்ஸ்தான்** இருக்கிறது என்கிறார்களே இது எவ்வளவு பெரிய **பொய்.** எந்த பேங்கிலும் குறைந்தபட்ச பேலன்ஸ் Rs. 4000/- இருக்க வேண்டும். இவர்கள் பேங்குக்கு மட்டும் சைபர் பேலன்ஸ் எப்படி அனுமதிப்பார்கள்.

ஏஞ்ஜல் TVயில் சாது செல்வராஜ் பேட்டி நடந்தபோது இவர் மாமியார் Mrs. ஸ்டெல்லா தினகரர் தன் மருமகளை பற்றி பேசும்போது தான் மருமகளுக்கு ஒரு புடவை எடுத்துக் கொடுத்தால் அவள் அதை விரும்புவதில்லை. மிக விலை உயர்ந்த புடவைதான் வாங்குவாரே தவிர, விலை குறைந்த புடவை ஒன்று கூட அவளிடத்தில் இல்லை என்றார். மேலே நடந்த பெண்கள் கூட்டத்தில் **Mrs. ஏஞ்ஜல் பால்** பேசும்போது **உடுத்திக்கொண்டிருந்த புடவையே** விலை உயர்ந்த புடவைதானே. எங்கள் பேங்க் அக்கவுண்ட்டில் 0 பேலன்ஸ் இல்லை என்பவர் வீட்டில் தான் **மூட்டை மூட்டையாய்** ரூபாய் நோட்டுகளை வருமான வரி துறையினர் பிடித்தனர். **120 கோடி ரூபாய்களை** காருண்யா கல்லூரி **கெஸ்ட் ஹவுஸில்** கத்தை கத்தையாக பிடிதனரே இவர்களா ஏழைகள் ?

HINDU என்ற இந்து தினசரி நாளிதழில் **421 வங்கிகளில்** இவர்களுக்கு அக்கவுண்ட் இருக்கிறது. **இந்த பெண்** பொய் பேசுகிறது. கொஞ்ஜமாவது நம்புகிற அளவு பேசியிருக்கலாம். அங்கு உட்கார்ந்து அவர் பிரசங்கத்தை கேட்ட பெண்கள் யாரும் இவர் கூறியதை **நூற்றுக்கு நூறு நம்பியிருக்கமாட்டார்கள்.** ஜனங்கள் முன்பு போல் அல்ல, விழித்துக்கொண்டார்கள். **Mrs.ஏஞ்ஜல் பால் தினகரன்** அவர்கள் தன் கணவருக்காக **பெண்களின் அனுதாபம்** பெற அப்படி பேசியிருக்கலாம். மேலும் இவர் தகப்பனார் திருநெல்வேலியில் டயர் கம்பெனி முதலாளி. ஏராள கட்டிடங்களிலிருந்து வாடகை கொட்டுகிறது. **எப்படி இவர் வங்கியில்** பணம் இல்லாமல் ரோஹபாகும். சைபர் பேலன்ஸ உண்டாகும். இப்படி **பொய் பேசும் பெண்ணை** எந்த ஆவிக்குரிய கூட்டத்துக்கும் அழைக்காதீர்கள். **கணவனுக்கு தெரியாமல் திருடுகளை செய்ய** அவர் ஆலோசனை கூறுவார் எச்சரிக்கை!.



## பால் தினகரனில் புது ஊழிய வியாபாரம்

### திருவனந்தபுரத்தில் ஜெப கோபுரம்

சகோ. D.G.S. தினகரன் **ஜெப கோபுரம்** என்ற பெயரில் இந்தியா – வெளிநாடுகளில் நிலம், கட்டிடங்கள் வாங்கியதை அறிவீர்கள். இப்போது மகனும் **ஜெப கோபுரம்** என்ற பெயரில் **கேரள மக்களை** ஏமாற்ற **கேரள தலைநகரில் நிலம் வாங்கிவிட்டார்.** அந்த நிலத்தில் **ஜெப கோபுரம்** என்ற பெயரில் கட்டிடம் கட்ட நாலுமாவடி **மோகன் சி. லாசரஸ்** போல் 10,000/– காணிக்கை கொடுத்தால் 10,00,000/– பத்து வட்சம் **கர்த்தர் தருவார்** என்று சாட்சி எழுதி விளம்பரம் செய்வார். அதைப்போல **பால் தினகரனும்** ரூபாய்க்கு பதில் புதுமையாக **செங்கல்** விற்கும் வியாபார நுணுக்கத்தை விளம்பரப்படுத்தியிருக்கிறார்.

**திருவனந்தபுரம்** ஜெப கோபுரம் நான்கு அடுக்கு கட்டடம் கட்ட **ஒரு செங்களுக்கு** பத்து ரூபாய் கணக்கில் **100 செங்களுக்கு 1000 ரூபாய் கொடுங்கள்** அல்லது 1000 செங்களுக்கு 10,000 ருபாய் அனுப்புங்கள். **இப்படி செங்கல்கள் வாங்கி கொடுப்பவர்களுக்கு** கர்த்தர் புதுவீட்டை கட்டி உதவுவார் என்று இயேசு அழைக்கிறார் பத்திரிகையில் விளம்பரப் படுத்தியுள்ளார்.

இப்போது **பால்தினகரன்** ஆவிக்குறிய **செங்கல் வியாபாரி** ஆகிவிட்டார். அவருக்கு தெரியும் **கேரள** முழுவதும் **கல்ப் பார்ட்டிகள்** நிறைய உண்டு. **துபாய்**, குவைத், போன்ற **அரபு நாடுகளில் வேலை செய்பவர்கள்** நிறைய கிறிஸ்தவர்கள் உண்டு. இவர்கள் **செங்கல் வாங்கி கொடுத்தாலே** சீக்கிரம் ஜெப கோபுரம், **தங்கும் விடுதி** யாவையும் கட்டிமுடித்துவிடலாம். அப்படி கட்டினால் அதை திருவனத்தபுரம் டூரிஸ்ட் சென்டர் ஆக்கிவிடலாம். நல்ல **வியாபாரம்** கொழிக்கும்.

### வாலிபர்களை கவரவும் புது வியாபாரம் தொடங்கியுள்ளார்.

**இயேசு அழைக்கிறார்** டீ–ஷர்ட்டுகள், நவீன **ரிஸ்ட் பேன்ட்**, கீ. செயின்கள், **தண்ணீர் பாட்டில்கள்** விற்கிறார்கள். இவர்களிடம் இவைகளை விலைக்கு வாங்கினால் இளைஞர்கள் **இயேசுவின் சாயலாய் மாறலாம்.** இவைகளை ஆங்காங்குள்ள **ஜெப கோபுர** அலுவலகத்தில் **பணம் கொடுத்து** வாங்கிக்கொண்டு **வசனத்துக்கு கீழ்படியாமல்.** இரட்சிக்கப்படாமல் குறுக்கு வழியில் **இயேசுவின் சாயலாய் மாறலாம். அற்புதமான வியாபாரம்**

இனி **இயேசு அழைக்கிறார் பலசரக்கு கடை,** ரெடிமேடு **ஆடைகள் விற்கும்** கடை இவையாவும் **திட்டத்தில் உண்டு என்று நினைக்கிறேன்.**

### தீர்ககதரிசனை ஜெப பயிற்சி

பால் தினகரனின் தகப்பனார் D.G.S. தினகரன் அந்த ஆரம்ப காலத்தில் ஆரம்பித்த School of Evangalism - பவர் மினிஸ்ட்ரி. இவைகளில் படித்த மோகன் C. லாசரஸ், சாது சுந்தர் செல்வராஜ் மகன் இன்னும் பலர் படித்துவிட்டுதான் ஜெபத்தில் பெயர் அழைக்கவும்.

வியாதியின் பெயரை சொல்லவும் ஆரம்பித்து, மேலும் அமெரிக்காவில் ஆரம்பித்த அன்னிய பாஷை தீ போல் பறவி உலகெங்கம் அன்னிய பஷை என்ற பயிற்சிபெற்று உளர தொடங்கியதுபோல், இப்போது தமிழ்நாட்டில் பெரும்பாலான சுகமளிக்கும் கூட்டம் நடத்துபவர்கள் ஜெபத்தில் பெயர் அல்லது வியாதியின் பெயர் கூறாமல் இருப்பதில்லை. மக்கள் அதை விரும்புகிறார்கள். அதற்காகவே அந்த கூட்டங்களை தேடி ஓடுகிறார்கள்.

மோகன் C. லாசரஸ் HIV வியாதி எயிட்ஸ் வியாதி சுகமாகிவிட்டது என்று ஒரு வாலிபனைப்பற்றி தீர்க்கதரிசனம் கூறி டாக்டர்கள் அவன் வீட்டை கண்டுபிடித்து அவன் எய்ட்ஸ் வியாதி சுகமாகவில்லை, அதிகமாகிவிட்டது. சீக்கிரம் அவன் இறந்து விடலாம் என்று எழுதிய விவரத்தை மோகன் C. லாசரஸ்க்கு அனுப்பி நீங்கள் கூறிய தீர்க்கதரிசனம் பொய்யாய் போனதே என்று எழுதினார்கள். ஆனால் பதில் இல்லை. இயேசு விடுவிக்கிறார் டிரஸ்டியான Dr. அன்பு. M.D., அவர்களுக்கு அனுப்பி நீங்கள் ஒரு டாக்டர் தானே. உலகத்தில் இதுவரை எயிட்ஸ் வியாதி சுகமானதா, உங்களுக்குகூட தெரியாதா? நீங்களாவது மோகன் C. லாசரஸ்க்கு ஆலோசனை கூற கூடாதா? என்று எழுதியதற்கும் பதில் இல்லை. காரணம் அன்று நடந்த கூட்டத்தின் வீடியோ ஆதாரம் இருக்கிறது. இதுவரை யாரிடமிருந்தும் பதில் இல்லை. இவர்கள் யாவரும் பொய்க்கும் பொய்க்கு பிதாவுக்கும் துணை போகிறவர்கள் என்றால் அது மிகையாகாது என்று நெய்வேலியிலிருந்து ஒரு டாக்டர் எழுதினார்.

இந்த லட்சனத்தில் மகன் பால் தினகரன் தீர்க்கதரிசன ஜெப பயிற்சி முகாம் நடத்துகிறார்கள். பயிற்சியாளர் யார் தெரியுமா? எங்களுக்கு பேங்கில் ஒரு பைசா கூட இல்லை. **சைபர் பெலனஸ்** என்று பொய் செய்தி அறிவித்த Mrs. எஞ்ஜலின் மகன் சாம் பால், மகள் ஸ்டெல்லா. அருமையான பயிற்சியாளர்கள். பொய் தீர்க்கதரிசிகள் பயிற்சி கொடுத்தால் பயற்சிபெற்று வருபவர் அனைவரும் பொய் தீர்க்கதரிசிகளாக பெருகுவார்கள். இது எங்கு போய் முடியுமோ? இந்த லட்சனத்தில் காருண்யா வேதாகம கல்லூரி தொடங்கி விட்டார்கள். காருண்யா டீம்டு யுனிவர்சிட்டியில் சம்பாதித்ததைபோல் இதில் சம்பாதிக்க முடியாது. இவைகள் நஷ்ட கணக்கில் வருமான துறைக்கு காண்பிக்க உதவும்.

கேள்வி கேட்டவருக்கு இப்போது புரிகிறதா **இயேசு அழைக்கிறார்** பொது கூட்டம் ஏன் இப்போது தமிழ்நாட்டில் நடத்தப்படுவதில்லை என்று. என்றாலும் நம் மக்களுக்கு **ஞாபக மறதி** அதிகம் உள்ளவர்கள். இவர்களின் **பழைய கள்ள ஊழிய** முறைகளை மறந்து மறுபடியும் இவர்கள் ஊழியத்தை தொடங்க இவர்களை மறுபடியும் உற்சாகபடபடுத்துவார்களோ என்னவோ?

**ஏமாறுபவர்கள் இருக்கும் வரை**

**ஏமாற்றுபவர்கள் வாழையடி வாழையாக வந்து கொண்டேயிருப்பார்கள்.**

உங்கள் கேள்விக்கு நன்றி. நீங்கள் உங்கள் கைபேசி எண்ணை எழுதியிருந்தால் பிரயோஜனமாக இருந்திருக்கும்.

# பொய் தீர்க்கதரிசிகள் ஜாக்கிறதை !

**கர்த்தர் கூறுகிறார் :-** தீர்க்கதரிசிகள் என் நாமத்தை கொண்டு பொய்யாய் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் .

நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்கு கற்பித்ததும் இல்லை. அவர்களோடு பேசினதுமில்லை. அவர்கள் கள்ள தரிசனத்தையும், தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே. உங்களுக்கு தீர்க்கதரிசனமாய் சொல்லுகிறார்கள்...... எச்சரிக்கை !

தங்கள் இருதயத்தில் இருக்கிறதையே எடுத்து தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களோடே நீ சொல்ல வேண்டியது என்னவென்றால்... தாங்கள் ஒன்றும் தரிசியாமலிருந்தும் தங்களுடைய ஆவியான ஏவுதலை பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ !

சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம் என்று சொல்லி என் ஜனத்தை மோசம் போக்கிறார்கள். எசே. 13:2,3,10

**MAY - 2023**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.